**யக்கலமுள்ள பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஜூன் 06 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 அக்டோபர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, யக்கலமுள்ள பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டின் போது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில்லிருந்து சபைக்குக் கிடைத்திருந்த அதிர்வு உருளையின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது பண்டக் கணிப்பீட்டின் போது அகற்றப்பட்ட ரூபா 153,450 தொகை கிரயத்தையுடைய நிழல் பிரதி இயந்திரத்தின் பெறுமதி தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 45,630 தொகைக்கான 1 சதவீத வரியினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 14,757.267 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத் தொகை ரூபா 1,115,729 தொகைக்கான வித்தியாசங்கள் காணப்பட்டன.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 16,558,777 தொகைக்கான 09 பெற வேண்டிய கணக்கு மீதிகள் பெறுமதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,415,454 இற்கான மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 322,616 இற்கான முத்திரை கட்டணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 9,846,050 இற்கான தொகையினை தீர்ப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 21,586,605 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 109,358,052 தொகைக்கான 5 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரை தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற் கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசு நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | இரண்டு நடைமுறை கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடுப்பனவுக்காகச் சமர்பிக்கபடாத 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 58,650 தொகைக்கான 28 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 570,571(1)(2) | 2016 திசெம்பர் 02 திகதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 346,306 தொகைக்கான 04 வைப்பு மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபைக்கு சொந்தமான 18 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,546,679 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,773,831 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 227,152 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்ட்டன

(அ) முறையான அங்கீகரம் ஒன்று இன்றி சபையினால் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துவதற்காக சபை வருமானத்தில் இருந்து ரூபா 5,141,923 தொகை மீளாய்வாண்டின் போதும் செலவிடப்ட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 6,318,252 தொகையான திரண்ட நிதியத்தின் வரவு மீதியை மீளாய்வாண்டின் போது ரூபா 2,558,054 ஆகிய இருந்த போதிலும் திரண்ட நிதியக் கணக்கில் வரவு மீதிகள் காணப்படல் பலவீனமான நிதி முகாமைத்துவ நிலைமையொன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நடைமுறை விகிதாசாரத்தில் மற்றும் விரைவு விகிதாசாரத்தில் குறைந்த வளர்ச்சி ஒன்றினை காட்டியது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வீத வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 (1) மற்றும் (2) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வது தொடர்பாக சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 257,426 தொகையில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. 28 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததுடன், நிலுவை ஏக்கர் வரியினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.4.3 வர்த்தக வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்பட்ட வர்த்தக வரி ரூபா 80,450 மற்றும் கைத்தொழில் வரி ரூபா 30,200 தொகைகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 10,659,951 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 17 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 80,878 தொகையான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) (i) பதவியணி திட்டத்தில் 04 வெற்றிடங்களும் அபகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மிகையான 11 பதவியணியினரும் காணப்பட்டதுடன் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கு மற்றும் வெற்றிடயங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் சபைக்கு மின்சார தொழில்நுட்ப ஊழியர் ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்படாமல் அந்த விடயங்கள் சுகாதார தொழிலாளர் ஒருவர் மூலம் நிறைவேற்றபட்டிருந்ததுடன், 2016 செப்தெம்பர் மாதம் கடமையில் ஈடுபட்டிருந்த போது மின்னோட்டம் தாக்கியதன் காரணமாக அந்த ஊழியர் இறந்துள்ளார்.

(இ) சபையின் 02 வங்கி கணக்குகளில் காணப்பட்ட மாதாந்த சராசரி மீதி ரூபா 2,597,240 தொகையாக இருந்ததுடன், மேலதிக பணத்தை முதலீடு செய்யாமையால் சபைக்கு உழைக்க கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது.

(ஈ) சபையினால் பயன்படுத்தப்படும் 06 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 214 இன் பிரகாரம் வருடாந்த பண்டக் கணக்கீடு ஒன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்திட்டங்களை தாமதம் செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஹிரியமல் கும்புர வெலிஹேன பாதையை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 1,000,000 இற்கான தொகையினை குறிப்பிட்ட நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாமல் திருப்பி அனுபப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் தெல்லமபுற ஸந்தகிரிதென்ன பொது கிணறு நிர்மாணித்தல், வல்பல பிங்கொடவத்த பொது கிணற்றினை புனர் நிர்மாணம் செய்தல் மற்றும், வீதி விளக்குகளை பராமரித்தல் ஆகிய 03 விடயங்களுக்காக ரூபா 160,000 தொகை சபைக்கு கிடைத்திருந்த போதிலும், அந்த வேலைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

நான்கு சில்லு குபோடா மினி டிரக்டர் மற்றும் டெயிலர் அதே போல் மிட்சுபிசி டபள் கப் வண்டி ஒன்றை திருத்த வேலை மேற்கொண்டு, அதனை மீண்டும் பயன்படுத்துவதற்காக அல்லது அகற்றுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது 2015 ஜூலை 10 திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்காத நிலைமை ஒன்று காணப்பட்டது.

## 3.4 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் வல்பல வெலெந்தாவவத்த என்ற காணியில் சேதனப் பசளை செயற்தளம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதுடன், அங்கு உக்கக் கூடிய காபனிக் கழிவுப் பொருள் மூலம் குறைந்த செலவில் உரம் உற்பத்தி செய்து, விற்பனை செய்வதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 133,337 தொகை உழைத்திருந்த போதிலும் சபை சேகரிக்கும் உக்காத கழிவு பொருட்களை களஞ்சிய அறையில் மற்றும் சேதனப் பசளை செயற்களத்திற்கு பக்கத்தில் இருக்கும் கட்டிடமொன்றில் களஞ்சியபடுத்தியிருந்ததுடன், அவற்றை விற்பனை செய்வதற்கு அல்லது மீள் சுழற்சி செய்வதற்கு சபையிடம் எதிர்கால வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை.

(ஆ) வெலந்தாவவத்த சேதனப் பசளை செயற்திட்டதிற்காக கூரை நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் மழை நாட்களில் அதிக துர்நாற்றம் வீசுகின்றது என அப் பகுதியில் குறிப்பிட்டு அப்பகுதியில் வதிவோரினால் காலி மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்திருந்தது.

(இ) இந்த சேதனப் பசளை செயற்களத்திற்கு கூரை ஒன்று நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 தொகை ஏற்பாடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 09 செலவு விடயங்களில் ரூபா 17,946,412 தொகையான சேமிப்பும், 05 வருமான விடயங்களில் ரூபா 12,008,512 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) மாற்றமின்றி முன் கொண்டு வரப்படுகின்ற கணக்கு மீதிகளைத் தீர்த்திருக்கவில்லை. |
| | (ii) நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. |
| | (iii) வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) இரண்டு வருட காலத்தை கடந்துள்ள வைப்பு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) செயற்படாத வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | 09 செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டன. |
| | | (ii) | 07 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் காணப்பட்டன. |
| (ஈ) | பதிவேடுகள் பேணப்படல் | (i) | சபையினால் வாகன பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | நிலையான சொத்துக்கள் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப் பட்டிருக்கவில்லை. |
| | | (iv) | கணினிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அதேபோல் மிகைப்பதவியணியை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்க வில்லை. |
| | | (ii) | முத்திரை கட்டண வருமானம் இற்றை வரை அறவீடு செய்திருக்கவில்லை. |
| | | (iii) | வீதவரி வலயங்கள் குறிப்பிட்டு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |